**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 23.01.2024 |
| Case No. | : **O.S.118/2020** | Nationality | : Indian |
| Name | : சாந்தி | Religion | : |
| Father's/Husband's Name | : மேகராஜன் | Age | : 59 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எந்த ஆவணத்தை பார்த்து தாவா சொத்து வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் வைத்திருந்த 1923 ம் வருடத்திய வீட்டு பத்திரத்தை பார்த்து எழுதப்பட்டது. அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாசாஆ 1 கிரய ஆவணத்தை படித்து பார்த்ததாக ஏற்கனவே குறுக்கு விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ 1 கிரய ஆவணத்தில் மேற்படி சொத்து விவரம் எங்குள்ளது என்றால் எழுத்து எனக்கு புரியவில்லை. வாசாஆ 1 கிரய ஆவணத்தில் புல எண் 174/2 கண்ட 5 செண்ட் விஸ்தீரணம் மற்றும் 172/1 ல் கண்ட சொத்தில் கண்ட 12 செண்ட் விஸ்தீரணம் மொத்த விஸ்தீரணத்தில் பேர்பாதி காசியம்மாள் விலைக்கு வாங்கி உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மொத்த சொத்தும் நாங்கள் வாங்கியதுதான்.

2. சரஸ்வதியம்மாள் யாரிடம் இருந்து சொத்தை விலைக்கு வாங்கினார் என்றால் அருணாச்சலபிள்ளையிடம் இருந்து வாங்கி உள்ளார். சரஸ்வதியம்மாள் வாங்கிய சொத்தில் பேர்பாதிதான் காசியம்மாள் விலைக்கு வாங்கி உள்ளார் என்றால் பத்திரத்தை பார்த்தால்தான் தெரிய வரும். எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்து வெங்கட்ராம பத்தர் மற்றும் குப்புசாமி பத்தர் ஆகியோருக்கு சொந்தமானது என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்கு தாவா சொத்து சொந்தமானது என்று எவ்வாறு சொல்லப்பட்டது என்றால் அவர்கள் இருவரும் ஏலம் எடுத்த வகையில் பாத்தியப்பட்டது. அவர்கள் ஏலம் எடுத்த சொத்தின் புல எண் என்ன என்றால் 172/1 ஆகும். அதன்

விஸ்தீரணம் என்ன என்றால் 12 செண்ட் ஆகும். மேற்படி நபர்கள் ஏலம் எடுத்தது சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. குப்புசாமி பத்தரின் மனைவி பெயர் சரஸ்வதியம்மாள் என்றால் சரிதான். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்தில் பிரச்சனை செய்யக்கூடாது என்று தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து காசியம்மாளுக்கு சொந்தம் என்றால் சரிதான். தாவா சொத்து எங்களுக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் எனது அம்மா 60 வருடங்களாக தாவா சொத்தில்தான் வசித்து வருகிறார். மற்ற வாரிசுகள் பணம் வாங்கி கொண்டு சென்றுவிட்டார்கள். அவ்வாறு மற்ற வாரிசுகள் பணம் பெற்றுகொண்டதற்கு ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. மற்ற வாரிசுகளுக்கு பணம் கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. அபூர்வத்தம்மாள் என்பவரை தெரியுமா என்றால் அவர் எனது அப்பாவின் அக்கா ஆவார். முருகேசன் மற்றும் பக்கிரிசாமி ஆகியேரை தெரியுமா என்றால் எனது அப்பாவின் தம்பிகள் ஆவார்கள். சகுந்தலா மற்றும் ராமுஅம்மாள் ஆகியோரை தெரியுமா என்றால் எனது அப்பாவின் தங்கைகள் ஆவார்கள். மேற்படி 5 பேரும் சேர்ந்து கடந்த 10.6.2022 ம் தேதி சுதர்சன் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. மேற்படி அபூர்வத்தம்மாள் பிரதிவாதியின் மாமியார் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பற்றி எனக்கு தெரிந்ததாக கூறினால் தாவா சொத்தில் பாகம் கொடுக்க வேண்டும் என்பதற்காக அதனை தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. கும்பகோணம் சார்பு நீதிமன்றத்தில் எனக்கு எதிராக அவ எண்.470/2020 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள பாகபிரிவினை வழக்கில் நான் ஆஜராகி உள்ளேனா என்றால் எனது வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி உள்ளேன். இந்த வழக்கில் பிரதிவாதி என்ன கட்சி செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. கும்பகோணம் சார்பு நீதிமன்ற வழக்கில் பிரதிவாதி என்ன கட்சி செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. காசியம்மாளுக்கு சொந்தமான தாவா சொத்தில் எனக்கு 1/7 பங்கு சொத்துதான் பாத்தியம் என்றாலும் பிரதிவாதியின் மகன் சுதர்சனுக்கு 5/7 பாகம் பங்கு சொத்து பாத்தியம் என்றாலும் எனது அப்பாவின் அக்காவான தனலெட்சுமிக்கு 1/7 பாகம் பங்கு சொத்து பாத்தியம் என்றாலும் மீதியுள்ள சரஸ்வதியம்மாளுக்கு சொந்தமான பேர்பாதி பாக சொத்து முழுவதும் பிரதிவாதி கோமதிக்கு சொந்தமான சொத்து என்றாலும் சரியல்ல. மேற்படி விவரத்தை நான் மறைத்து தாவா முழு சொத்தும் எனக்கு சொந்தமானது என்று குறிப்பிட்டு பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நான்கெல்லை தவறானது என்றால் சரியல்ல. அரசரடி ரோட்டிற்கு மேற்கே பிரதிவாதி சொத்திற்கு அடுத்துதான் எனது சொத்து உள்ளது என்றால் சரியல்ல. நடேச பத்தருக்கு சொந்மானது

சொத்தாக கூறப்படும் சொத்திற்கு வடக்கில் பிரதிவாதியின் சொத்தினை அடுத்துதான் எனது சொத்து உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகி எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் 35 வருடங்கள் ஆகிறது. பிரதிவாதி சரஸ்வதியம்மாளால் புல எண் 174/2 ல் கட்டப்பட்ட வீட்டின் ஒரு பகுதியில்தான் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்து விவரத்தில் சொல்லி உள்ளதுபோல் புல எண் 172/1 ல் வீட்டு மனையே கிடையாது என்றால் சரியல்ல. அந்த வீட்டில்தான் நாங்கள் குடியிருந்து வருகிறோம். பிரதிவாதி அவருடைய சொத்தை அனுபவம் செய்வதை நான்தான் தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

( பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

ஒப்பம்/- நா. சிவபழனி,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.